17th August 1963]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல முடியும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், முதுமலை சரணாலயத்தை விஸ்தரிக்கும் திட்டம் ஏதாவது சர்க்காரிடத்தில் இருக்கிறதா ? அப்படியானுல் எந்த அளவுக்கு விஸ்தரிக்கப்படும் ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : விஸ்தரிப்பது என்றால், ஸாங்க்சுவரியை விஸ்தரிப்பது பற்றி சொல்லுகிறுர்களா அல்லது ரோடுகள் முதலியவைகளை விஸ்தரிப்பதைப்பற்றி சொல்லுகிறுர்களா என்று தெரியவில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : திராவிட முன்னேற்றக் கழகத்தார் குளு குளு ஊட்டிக்கு வரமாட்டோம் என்று சொல்லவில்லை. சட்டமன்றத்தை அங்கு கூட்ட வேண்டிய அவசியமில்லை என்று தான் சொன்னுர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI N. NALLA SENAPATHI SARKARAI MANRADIAR : Thanks for the Information of the Hon. the Leader of the opposition.

சுற்றுப்பயணர் விடுதி (உதகை)

* 182 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் ஊட்டியில் 25-4-1963-ல் புதிய சுற்றுப் பயணர் விடுதி திறக்கப்பட்டதா ?

(இ) அதில் உள்ள அறைகள் எத்தனை, வாடகை விவரமென்ன ?

(உ) இப்போதுள்ள வாடகையைக் குறைக்குமாறு கோரிக்கைகள் ஏதேனும் வந்தனவா ?

(எ) அவைகளின்மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட முடிவுகள் என்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம், ஐயா.

(இ) இந்தக் கட்டிடத்தில் 32 தனிநபர் அறைகளும், 12 இருவர் தங்குவதற்கான அறைகளும், ஒவ்வொன்றிலும் இரு படுக்கைகள் உள்ள 2 விசேஷ அறைகளும், ஒவ்வொன்றிலும் 8 படுக்கைகள் கொண்ட 2 பொது தங்குமிடங்களும் உள்ளன. இவைகளுக்குக் கீழ்க்கண்ட வீதப்படி வாடகை வசூலிக்கப்படுகிறது.

ஒரு நாள் அல்லது ஒரு நாளில் குறிப்பிட்ட பகுதி	
1. தனி அறை	ரூ. 10.00
2. இருவர் தங்குவதற்கான அறை	ரூ. 15.00
3. விசேஷ அறை	ரூ. 25.00
4. பொது தங்குமிடம்	ரூ. 5.00 தலா நபருக்கு அல்லது 8 நபர்

[17th August 1963

களுக்கு மேற்
படாமல் உள்ள
குழுவிற்கு
ரூ. 30.00.

கூடுதலாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் ரூபாய் 3.00 விதம் வசூலிக்கப்படும். அறைகளில் குளிருக்காக கணப்புகள் தேவைப் பட்டால், ஒவ்வொரு கணப்புக்கும், ஒரு நாளைக்கு, அல்லது ஒரு நாளில் பகுதிக்கு ரூ. 3.00 கொடுத்தால், கணப்புகள் தரப்படும்.

(உ) இல்லை.

(எ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. ர. நல்லசிவம்: இப்போது 10 ரூபாய் என்றிருப்பதை, மத்திய தர வர்க்கத்தினர் வந்து தங்கும் அளவுக்கு, 5 ரூபாய் என்று குறைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: தலா ஒன்றுக்கு 5 ரூபாய் கட்டணத்தில் பொதுவாக தங்கும் இடமும் இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், மத்திய தர வகுப்பினர்கள் ஓய்வு நேரத்தில் ஊட்டியில் வந்து தங்குவதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே மத்திய வகுப்பினர்கள் தாராளமாக தங்கக்கூடிய அளவுக்கு குறைந்த வாடகையில் கிடைக்கக்கூடிய அளவில் ஒரு டூரிஸ்ட் ஹோமை கட்டுவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: இப்போது போடப்பட்டிருக்கும் வாடகை கூடுதல் என்று யாரும் குறை சொல்லவில்லை. இப்போ திருக்கும் வாடகை பொதுவாக எல்லோராலும் கொடுக்கக்கூடிய அளவில் இருப்பதாகத்தான் அபிப்பிராயம் இருந்து கொண்டி ருக்கிறது. நான் நேரில் சென்றிருந்தபோது அங்குள்ளவர் களிடம் விசாரித்தபோதும், மேலும் சில வசதிகள் வேண்டுமென்று தான் கேட்டார்களே தவிர வாடகையைப்பற்றி குறை ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே தற்போது அதைக் குறைக்கவேண்டும் என்ற உத்தேசம் அரசாங்கத்திற்கில்லை.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: தலைவர் அவர்களே, இந்தத் தங்கும் விடுதியில் எம்.எல்.ஏ. க்களுக்கு ஏதாவது விசேஷ சலுகை உண்டா?

கனம் திரு. கோ. பூவராகன்: யாருக்கும் தனியாக விசேஷ சலுகை கிடையாது.

திருமதி சி. குழந்தையம்மாள்: தலைவர் அவர்களே, வைகை போன்ற இடத்தில் மாணவர்கள் கூட்டமாக வந்து தங்கும் அளவிற்கு வசதியாக ஹால் கட்டப்பட்டு வாடகைக்கு கொடுக்கப் பட்டுவருகிறது. இது போன்று இங்கேயும் குறைந்த வாடகையில் ஏதாவது ஹால் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

17th August 1963]

கனம் திரு. கோ. பூவராகன் : இங்கே தனி நபர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் கட்டணத்தில் எட்டு பேர்கள் வரை தங்குவதற்குள்ள வசதியிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், உதகை அகில இந்திய புகழ் வாய்ந்த இடமாக திகழ்கிறது. அயல் நாட்டிலிருந்தும், வேறு பல மாகாணங்களிலிருந்தும் பல பிரபுக்கள், பணக்காரர்கள் இவர்கள் எல்லாம் வருகிறார்கள். இவர்கள் தங்குவதற்கென்று தனியாக ஒரு டூரிஸ்ட் ஹோம் கட்ட வேண்டும் என்று தீர்மானித்து அதற்காக அமைச்சர் அவர்கள் ஒரு இடத்தையும் பார்வையிட்டு வந்தார்கள். அந்தத் திட்டம் இப்போது எந்த நிலைமையில் இருக்கிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : பார்த்து வந்த நிலைமையில் தான் இருக்கிறது. தற்போது அந்தத் திட்டம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. மா. இராசாங்கம் : ஸார், உதகையைப் போன்றே கொடைக்கானலும் குளிர்ச்சியான இடம் என்று நாம் எல்லோரும் பெருமைப்படுகிறோம். அங்கேயும் ஒரு சுற்றுப் பயண விடுதியை திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அங்கேயும் ஒரு விடுதி கட்ட வேண்டும் என்ற திட்டம் அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறது. ஆனால் தற்போதுள்ள நெருக்கடி நிலைமையின் காரணமாக திட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், நான் முன்னால் என் கேள்வியில், ஊட்டியில் இப்போதுள்ள டூரிஸ்ட் ஹோமிலுள்ள வாடகையை குறையுங்கள் என்று கேட்கவில்லை. இப்போதுள்ள டூரிஸ்ட் ஹோமில் வசதி உள்ளவர்கள் தான் வந்து தங்க முடியும். வசதியில்லாத நடுத்தர வகுப்பினர்கள் வந்து தங்குவதற்கு வசதியாக தனியாக ஒரு டூரிஸ்ட் ஹோம் கட்டுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற ஆலோசனையையும் பரிசிலனை செய்யலாம்.

திரு. ஆர். ரங்கசாமி : இந்த தங்கும் விடுதியில் சர்க்கார் உத்யோகஸ்தர்களுக்கு தனியாக குறைவாக கட்டணமும், மற்றவர்களுக்கு வேறு கட்டணமும் இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ? அப்படியானால் சர்க்கார் உத்யோகஸ்தர்கள் போன்றே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வாடகை சலுகை கொடுக்க சர்க்கார் அனுமதிக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : எல்லோருக்கும் ஒரே வாடகை தான். தனியாக யாருக்கும் விசேஷ சலுகை கிடையாது.